**தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தித் தொடர்பு | அமுல்படுத்தியிருக்காத பரிந்துரைகள் | இவ்வறிக்கையின் பந்தித் தொடர்பு |
|---|---|---|
| 3.3 (அ) | பண்டகக் கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குயை தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 3.2 (அா) |
| 3.6 (இ) | காணிகளின் சட்டரீதியான உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து கட்டிட நிர்மாணத்திற்காக அரச ஏற்பாடுகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1 (அ) மற்றும் (ஆ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவினத்தை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தொழில் பயிற்சி நிறுவனம், புனர்வாழ்வு மத்திய நிலையம் மற்றும் வழிகாட்டி மத்திய நிலையத்தினை இஸ்தாபிப்பதற்காக திணைக்களத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த 33 | வத்தேகம காணிகளை கணக்கீடு செய்து பூர்த்தியாகியுள்ளதுடன் சீதுவ தொழில் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள ஆரம்ப காணியின் ஒரு பகுதியை தேசிய சமூக அபிவிருத்திகள் | காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை சுவீகரித்து பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கர் சதுர அளவான 05 காணிகளை அன்பளிப்பு செய்து 10 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும், அக் காணிகளின் மற்றும் அங்கு நிர்மாணித்திருந்த கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து காணி மற்றும் கட்டிடங்களாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிறுவனத்திற்கு ஒப்பந்தமொன்றின் மூலம் ஒப்படைத்துள்ளது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று விசாரிக்கப்படுவதால் அந் நடவடிக்கைக் முடிவடைந்தவுடன் சீதுவ காணியின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்று கணக்கீ செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறே சுவீகரித்து முடிவுற்றுள்ள ஏனைய 07 காணிகளிற்குரிய மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தொடர்புடைய ஆவணங்களை அனுப்பப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | தொழில் பயிற்சி நிறுவனங்கள் 11 இனை இஸ்தாபித்திருந்த காணிகளின் சட்டபூர்வ உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரித்திருக்காமை மற்றும் பெறுமதியை மதிப்பிட்டிருக்காததுடன் கடந்த 10 ஆண்டுகளிற்கு அதிக காலத்தினுள் நிர்மாணித்திருந்த கட்டிட கிரயத்தை இனங்கண்டு நிதியல்லா சொத்துக்களில் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | வத்தேகம் காணிகளை கணக்கீடு செய்து பூர்த்தியாகியுள்ளதுடன் சீதுவ தொழில் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள ஆரம்ப காணியின் ஒரு பகுதியை தேசிய சமூக அபிவிருத்திகள் நிறுவனத்திற்கு ஒப்பந்தமொன்றின் மூலம் ஒப்படைத்துள்ள தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று விசாரிக்கப்படுவதால் அந் நடவடிக்கை முடிவடைந்தவுடன் சீதுவ காணியின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்று கணக்கீ செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறே சுவீகரித்து முடிவுற்றுள்ள ஏனைய 07 காணிகளிற்குரிய மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தொடர்புடைய ஆவணங்களை அனுப்பப்பட்டுள்ளன. | காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை சுவீகரித்து பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடபடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 214 பிரமாணம் பிரகாரம் அதிகாரம் வழங்கும் உத்தியோகத்தரை போன்றே உறுதி செய்யும் உத்தியோகத்தரால் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளை தினந்தோறும் பரீட்சிக்க வேண்டிய போதும் அவ்வாறு பரீட்சிக்காது குறித்த பொறுப்புக்களிற்காக எதிர்வரும் ஆண்டில் கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பத்தில் பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிட திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதன் பிரகாரம் நி.பி ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்பு பதிவேட்டை நடாத்திச் செல்வதால் பொறுப்புக்கள் தொடர்பான கட்டுபாடு செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | கட்டுப்படுத்த முடியாத முக்கிய செலவினங்களை இவ்வாறு பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் எவ்வாறாயினும் 2023 ஆண்டு முதல் பொறுப்புக்கள் கொடுப்பனவுகளை மிகக் கட்டுப்பாட்டுடன் கொடுப்பனவு செய்ய குறித்த பிரிவை அறிவூட்ட நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிடுகிறேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 திகதி இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(ஈ) பந்தி ஏற்பாடுகள் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களையும் அவ் ஆண்டினுள்ளேயே விடுவிக்க வேண்டியதுடன் எந்தவொறு பொறுப்பையும் அடுத்து வரும் ஆண்டில் தீர்க்கும் நோக்கில் முன்கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஆலோசனை வழங்கி இருந்த போதும், அவ்வாறு கொடுப்பனவு செய்து விடுவிக்காது 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் காலம் கடந்த 19 செலவின விடயங்களிற்குரியதாக ரூபா 5,045,397 ஆன பொறுப்புக்கள் காணப்பட்டன. | குறித்த நிறுவனத்தினால் மேற்குறித்த பொறுப்புக்களை கொடுப்பனவு செய்ய ஏற்பாடு கோராததால் அதனை மாவட்ட செயலகத்தினூடாக விசாரித்து எதிர்காலத்தில் குறித்த பொறுப்புக்களை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளிற்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதி செய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து நடாத்திச் செல்லுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அம்மீளாய்வை ஆவணரீதியாக மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதாக உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 நிதிக்கூற்றுக்களின் 3 ஆம் பக்கத்தில் இது தொடர்பாக தெளிவாக குறிப்பிட்டு திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்துள்ளனர். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880 மற்றும் 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரச உத்தியோகத்தரின் பிணை கட்டளைச் சட்டம். | | பிணை வைக்க வேண்டிய 40 உத்தியோகத்தர்களின் 16 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பிணை வைப்பு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய 24 அலுவலர்களின் | பொ.நி.சு 07/2019 பிரகாரம் ஏனைய பிணை வைக்கும் முறை பிரகாரம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கொன்று ஆரம்பித்து 03 மாதங்களினுள் மொத்த பிணை | பிணை கட்டளை சட்டம் மற்றும் நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிணை வைப்பு பெறறுக் கொள்வது நீண்ட கால தாமதம் காணப்பட்டது. | தொகையை வைப்பு செய்ய நடவடிக்கை எடக்க வேண்டியதாக குறித்த உலுவலகரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2016 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் டீஎம்ஏ/எச்ரீ/2015/01 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 2.2 பந்தி | திணைக்கள வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 05 ஆண்டு காலத்தினுள் வருடாந்த பண்டக கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து தொழிற் பயிற்சி நிறுவன பொறுப்பு அலுவலர்களிற்கு, நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள், பண்டக கணிப்பீட்டிற்கு சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் ஆலோசனை வழங்கியிருந்த போதும் இன் நிறுவனங்களில் பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளிற்கு இடையில் கெடலவ மற்றும் பிரதான அலுவலகத்தின் கணிப்பீட்டறிகைகளின் வாகன பௌதீக பரிசோதனை மேற்கொன்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் அதிகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 பந்தியினால் அங்கீகார அலுவலர்களுக்கு மாதாந்தம் ஆகக்கூடிய தொகையாக ரூபா 1000 மேற்படாதவாறு தொலைபேசி பற்றுச்சீட்டினை மீள் நிரப்புவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் முரணாக பணிப்பாளரின் இச்சைப் படி மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் தொழில் பயிற்சி மத்திய நிலையங்களிற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் திணைக்கள சமூக சேவை | சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற் கும் படிகளை பெற்றுக் கொள்வதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பியதுடன் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களுக்கு மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொலை பேசி படியாக ரூபா 1000 தொகையை 2020 செப்டம்பர் முதல் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 872 சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு 2020 செப்டம்பர் முதல் 2022 திசெம்பர் வரையான காலத்தினுள் கூட்டுத் தொகை ரூபா 8,086,403 ஆன தொலை பேசி படிகளை செலுத்த முறையான அதிகாரம் கிடைத்திருக்கவில்லை. | அதற்காக 2021 மார்ச் 16 திகதியுடையதாக குறித்த படிகளை வழங்கவும் அதனை சம்பளத்துடன் செலுத்தவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் வருடாந்த பாதீட்டு ஏற்பாடு பயண்படும் முறையையும் குறிப்பிட்டு 2022 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை நடைமுறை ஆண்டு திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், 2022 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை உரிய திகதியில் தயாரிக்க மற்றும் அதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை உரிய திகதியில் தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாது போனதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தைத் தயாரித்து உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும |

### 3.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றுக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊனமுற்றவர்களின் அறிவினால் மற்றும் திறன்களினால் வலுவூட்டும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சமுதாய அடிப்படை புனர்வாழ்வு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த செயல் நடவடிக்கை | நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக ஏனைய மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. | திட்டமிட்ட நோகத்தை மிக செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக மேற்கொள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இருந்தது. எனினும் இச் செயற்பாட்டை மனிதவள அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்காது சமுதாய அடிப்படை புனர்வாழ்வு தேசிய வேலைத் திட்டத்தில் உள்ளடக்கி அதன் ஏற்பாடுகளினால் ரூபா 760,000 செலவில் அலுவலர்களுக்காக பயிற்சி செயற் திட்டமொன்றை செயற்படுத்தியிருந்தது. இச் செயற் திட்டத்தின் கீழ் சுய சக்தி குழுக்களின் உற்பத்தி விற்பனை கண்காட்சியொன்றை நடாத்த திட்டமிட்டிருந்த போதும் உற்பத்திக்காக இலட்சினையொன்றை அறிமுகஞ் செய்தல் மற்றும் பதிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்வதனூடாக எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை. மேலும் சமுதாய அடிப்படை வேலைத் திட்டத்தை நடைமறைப்படுத்த மீளாய்வாண்டிற்கு ரூபா 10,500,000 ஆன ஏற்பாடு பெறப்பட்டிருந்த போதும், அவற்றில் ரூபா 6,540,000 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஊனமுற்றவர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க ''திரிய உற்பத்தி'' பெயரில் வியாபார சின்னத்யை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக திரிய இலட்சினை பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்களை புனர்வாழ்வு செய்யும் நோக்கில ஆரம்பிக்கப்பட்டிருந்த தேசிய செயற்பாட்டுக் குழு கூட்டத்தை நடாத்துவது தொடர்பாக பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களிற்கு தற்போதே செயற்குழுவை செயற்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளதுடன், செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்குழுவை வெற்றிகரமாக நடாத்த நடவடிக்கை எடுப்பதாக. | |

### 3.3 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு 14 – 30 வயதையுடைய இளைஞர், யுவதிகளின் அடுத்து வரும் தொழிற் பயிற்சி நடவடிக்கைகளுக்காக முன் ஆயத்தத்திற்காக ஆரம்பித்திருந்த கொட்டாவ திறன் விருத்தி அபிவிருத்த மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2020 ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதும், அதன் பயிற்சி நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் ஆரம்பமாகி இருக்கவில்லை. | ஆண்டு 14 – 30 வயதையுடைய அம் மத்திய நிலையத்தில் இருந்த பிள்ளைகளில் பொருத்தமான தொழில் பெறுனர்களை கொட்டாவ நிறுவனத்திற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தியதன் பின்னர் தெரிவு செய்ய நேர்ந்ததால் அதற்காக சில காலம் கடந்தமை மற்றும் நிறுவனத்திற்காக உரிய ஆளணியை நியமிக்க தாமதமானது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக மற்றும் குறித்த நோக்கத்திற்கான செயற்பாடுகளிற்காக பயன்படுத்த நடிவடிக்கை எடுக்க வெண்டும். |

**3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் தூரநோக்கின் பிரகாரம் 2030 ஆண்டளவில் இலக்கு வைக்கப்பட்ட மக்களின் உரிமை மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளும் முன்னேற்றத்தை செயலாற்றுகை அறிக்கையில் உட்படுத்தி இருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையின் இரண்டாம் அத்தியாயத்தினுள் இந்த வேலைத் திட்டத்தினால் பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தை காண்பித்துள்ளது. | சுற்றறிக்கை மூலம் வழங்கியுள்ள ஆலோசனை பிரகாரம் செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கையின் தற்போது எல்லைபடுத்தப்பட்ட மற்றும் பிரதிகூலத்திற்குட்பட்ட மக்களின் தன்மை, அளவு மற்றும் அவர்கள் உலகளாவிய ரீதியாக பரந்துள்ளமை தொடர்பான புள்ளிவிபரம், வருடாந்தம் புதிதாக சேரும் அளவுகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தரவுகள், திணைக்களத்தினால் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வருடாந்தம் வலுவூட்டும் மக்கள் தொடர்பாக விரிவாக புள்ளிவிபரம், தரவுகள் மற்றும் தகவல்கள் பகுப்பாய்வு ரீதியாக செயலாற்றுகை அறிக்கையில் சமர்பிக்க இயலாதிருந்தன. | 2023 ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் கீழ் நாடு முழுவதும் பரந்துள்ள ஊனமுற்றவர்களின் தரவுத் தொகுதியொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயலாற்றுகை அறிக்கையிற்கு விரிவான புள்ளிவிபரங்கள், தரவுகள் மற்றும் தகவல்களை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு நடவடிக்கை 2023 மார்ச் 31 திகதியளவில் மேற்கொண்டிருந்த போதும், நி.பி. 760 ஏற்பாடுகள் பிரகாரம் 2021 ஆண்டு பண்டக கணிப்பீட்டின் போது இனங்கண்ட பற்றாக்குறை, மிகை மற்றும் பராதீனம் தொடர்பாக கணிப்பீட்டு சபை பரிந்துரை பிரகாரம் நடவடிக்கைகளை செயற்படுத்தி இருக்கவில்லை. மேலும், படுகம்மன தொழில் பயிற்சி மத்திய நிலையத்தில் பொருட் பதிவேடு மற்றும் பண்டங்கள் உரியவாறு பராமரிக்கப்படாததால் 2022 பண்டக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | களஞ்சிய பொருட்கள் கணிப்பீட்டு சபையினால் சுட்டிக் காட்டிய மிகையை புத்தகங்களில் உட்படுத்துமாறு மிகை பண்டங்கள் கண்டறியப்பட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br>பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்ட நிறுவனங்களிற்கு பற்றாக்குறைக்கான காரணமாக புத்தகங்களில் இருந்து பதிவழித்து அகற்றியில்லாததால் பொருட் பதிவேட்டில் ஒரே பண்டம் இரண்டு இடங்களில் காட்டப்பட்டுள்ளதால் பற்றாக்குறையாக காட்டப்படுவதாகவும், பற்றாக்குறையாக காட்டப்படும் பண்டங்களை மீண்டும் நிறுவனத்தினுள் பரிசோதிக்கும் போது கண்டறிய முடியுமாக இருந்ததாக மற்றும் பொருட் பதிவேட்டின் மீதி தவறுடையதாகவும் மற்றும் பொருட் பதிவேட்டை நாளாதுவரையாக்கி இல்லாததால் கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. | பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1956 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான 65 ஆண்டுகளினுள் இஸ்தாபிக்கப்பட்டிருந்த தொழில் பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் மற்றும் வழிகாட்டி மத்திய நிலையங்கள் 14 இனது காணிகளின் சட்டரீதியான உரிமையை சுவீகரித்து இருக்கவில்லை. முன்னைய அண்டில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டிய வாறு முறையாக சட்டரீதியான உரிமையை சுவீகரித்திற்கொள்ளாது கட்டிட நிர்மாணங்கள் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கடந்த 05 ஆண்டு காலத்தினுள் ரூபா 500 மில்லியனுக்கு அதிகமான தொகையொன்று செலவிடப்பட்டு இருந்தது. | 09 காணிகளை தற்பொது முறையாக சுவீகரிதிற்கொள்ளும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய காணிகளில் 04 நிறுவனங்களிற்குறிய காணி பங்குகளை, காணி அமைச்சு மற்றும் உரிய பிரதேச செயலகங்களுடன் தொடர்ப்புபட்டு சமூக சேவை திணைக்களத்திற்கு முறையானவாறு சுவீகரிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. மேலும், திணைக்களத்திற்கு காணியை சட்டரீதியாக சுவீகரித்திற்கொள்ளும் போது வெளித்தரப்பினர்/நிறுவனங்கள் உடன் தொடர்புபட்டு நீண்ட நடைமுறையை பின்பற்ற வேண்டியுள்ளதால் எஞ்சிய காணிகளை சுவீகரிப்பது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அந்த காணிகளை சட்டரீரியாக சுவீகரித்துக் கொண்ட பின்னர் மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்து கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்களின் உரிமையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டி பிரகாரம் சொத்துக்களை முகாமை செய்ய வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார ஆளணியில் உள்ளடங்காத அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) பதவிக்காக கடந்த ஆண்டுகளில் ஆட்சேர்த்திருந்த 196 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிகளில் சேவை புரியும் நிலைமையில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் விடய கடமைக்காக மேலும் 306 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்த்து அப் பதவிகள் அங்கீகார ஆளணியில் இல்லாத நிலையில் சமூக சேவை உத்தியோகத்தர் விடய கடமைக்காகவே மீண்டும நியமனம் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக 480 ஆன சமூக சேவை உத்தியோகத்தர் அங்கீகார ஆளணி எண்ணிக்கையை விஞ்சி 502 ஆளணி மிகையொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அரச கொள்கை மற்றும் தீர்மானங்களின் மீது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதாயின் அங்கீகார ஆளணியை திருத்திக் கொள்ள வேண்டியிருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய முதியோர் பொது செயலகத்தின் கீழ் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் விடய கடமைக்காக சமூக சேவைகள் திணைக்களத்திற்று அடிக்கடி அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்திருந்ததுடன் இவ் உத்தியோகத்தர்களுக்கு தேசிய முதியோர் பொது செயலகத்தின் பணிப்பாளரின் ஒருமைப்பாட்டுடன் முதியோர் விடய கடமைக்காக கடமை பட்டியலொன் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் தேசிய முதியோர் பொது செயலகத்தில் விடய கடமைகளை மேற்கொள்வதுடன் சமூக சேவைகள் உத்தியோகத்தர் இல்லாத சேவை நிலையங்களில் மாத்திரம் இந்த உத்தியோகத்தர்கள் சமூக சேவைகள் விடய கடமைகளை காப்புச் செய்கின்றனர். சமூக சேவைகள் திணைக்கள நிரந்தர ஆளணிக்கு அந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியை அங்கீகரித்துக் கொள்ள சமூக சேவைகள் பணிப்பாளரினால் பல சந்தர்ப்பங்களிலும் நி.பி. 71 விண்ணபம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. | அங்கீகார ஆளணியை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |